தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பழனியைச் சேர்ந்தவரின் ஆராய்ச்சி கட்டுரை: சர்வதேச கருத்தரங்கில் முதலிடம்

**பழனி**,

பழனியைச் சேர்ந்த இளைஞரின் ஆராய்ச்சிக் கட்டுரை, சர்வதேச கருத்தரங்கில் முதல் பரிசைப் பெற்றுள்ளது.

பழனி அண்ணா நகரைச் சேர்ந்தவர் செல்லப்பன் மகன் கே.சி. சிவபாலன்.

இவர், வேளாண் துறையில் மேற்படிப்பு முடித்து தற்போது, திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரியில், கைபேசி வழி வேளாண் தொழில்நுட்ப சேவைகள் குறித்து முனைவர் பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். சமீபத்தில், தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் தென்கிழக்கு ஆசிய காய்கறிகள்-2014, குடும்பம், பண்ணையம் மற்றும் உணவு என்ற தலைப்பில், சர்வதேச கருத்தரங்கு நடைபெற்றது. இதில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், அறிவியலாளர்கள் பங்கேற்றனர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உணவு உற்பத்தி, எதிர்காலத் தேவை, ஊட்டச்சத்து குறைபாடு, தோட்டக்கலை சாகுபடி, விவசாயிகளின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் வழிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், 97 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும், இதில் குழு விவாதம், பண்ணைச் சுற்றுலா ஆகியவையும் நடைபெற்றன. கருத்தரங்கில், இந்தியாவில் இருந்து 4 பேர் மட்டுமே பங்கேற்றிருந்த நிலையில், தமிழகம் சார்பில் பழனியைச் சேர்ந்த சிவபாலன் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருந்தார். இவர் சமர்ப்பித்திருந்த, காய்கறி பயிர்களில் மதிப்பு சங்கிலி மேலாண்மை (சப்ளை செயின் மேனேஜ்மெண்ட்) மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கு என்ற ஆய்வுக் கட்டுரை, சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரையாகத் தேர்வு செய்யப்பட்டு முதலிடம் பெற்றது.

சர்வதேச அளவில் வெற்றி பெற்ற சிவபாலனை, திருச்சி வேளாண் கல்லூரி டீன் பாண்டியராஜன், தலைவர் பத்மநாபன், பேராசிரியர் தியாகராஜன் மற்றும் அனைத்துத் துறை பேராசிரியர்கள், அலுவலர்கள் பாராட்டினர்.

**கரும்பு விவசாயிகளுக்கு வங்கிக் கடன் நிறுத்தம்**

**மதுரை,**

கரும்பு விவசாயிகளுக்கு அரசுடைமை வங்கியில் கடன் வழங்க மறுப்பது தொடர்பான மனுவுக்கு பதிலளிக்குமாறு, மாவட்ட ஆட்சியருக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம், கொட்டக்குடியைச் சேர்ந்த தமயந்தி தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் வி. ராமசுப்பிரமணியன், வி.எம். வேலுமணி ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தமயந்தி தனது மனுவில், கரும்பு விவசாயிகளுக்கு கடன் வழங்குவது தொடர்பாக அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையுடன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் திருவாதவூர் கிளை ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்படி, விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் முன்பணம் வழங்கும்.

கரும்புக்கான மொத்தப் பணத்தையும் வங்கியில் ஆலை நிர்வாகம் செலுத்தும். அதில், முன்பணத்தை கழித்துக்கொண்டு மீதத் தொகையை வங்கி வழங்கும்.

இந்த ஆண்டு வங்கியின் மண்டல மேலாளர் கடன் கிடையாது எனக் கூறியுள்ளார். இது பற்றி விசாரித்தபோது ஏற்கெனவே, வங்கியில் கிளை மேலாளராக இருந்தவர் முறைகேடு செய்திருப்பதால், இவ்வாறு முடிவு செய்திருப்பதாகத் தெரியவந்தது. எனவே, கடன் வழங்க உத்தரவிடவேண்டும் என அம்மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், மாவட்ட ஆட்சியர், சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குநர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளை மேலாளர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

**வைகை அணையை வந்தடைந்த முல்லைப் பெரியாறு தண்ணீர்**

**ஆண்டிபட்டி,**

முல்லைப் பெரியாற்றில் திறந்து விடப்பட்ட தண்ணீர் வெள்ளிக்கிழமை காலை வைகை அணையை வந்தடைந்தது.

வைகை அணைக்கு, மூல வைகையாற்றில் இருந்து நீர்வரத்து இல்லாததையடுத்து, முல்லைப் பெரியார் அணையில் இருந்து வரும் தண்ணீரை வைத்து குடிநீருக்கு திறந்துவிடப்பட்டு வருகிறது.

தற்போது வைகை அணையின் நீர் மட்டம் 30 அடி என்ற நிலையில் உள்ளது. இதில் அணையில் 20 அடிக்கு சகதியாக இருப்பதால், 10 அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. குறைந்த அளவிலான நீர் இருப்பை வைத்து வரும் கோடை காலத்தை சமாளிக்க முடியாத நிலை உள்ளது. இதையடுத்து குடிநீர் தேவைக்காக முல்லைப் பெரியாற்றில் இருந்து நீர் திறந்து விடப்பட்டது.

திறந்து விடப்பட்ட தண்ணீர் வெள்ளிக்கிழமை காலை வைகை அணையை வந்தடைந்தது.

தற்போதுள்ள சூழலில் முல்லைப் பெரியாறில் இருந்து அதிக அளவில் நீர் திறந்து விடப்பட்டால் மட்டுமே கோடைகாலத்தை சமாளிக்க முடியும் என்று கூறப்படுகிறது. கூடுதல் நீர் திறக்கப்படாத பட்சத்தில் குடிதண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 51.10 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 51.10 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 798 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.7 டி.எம்.சி.

## மா கன்றுகள், சம்பங்கி விதை கிழங்குகள் விற்பனைக்குத் தயார்

**நாமக்கல்,**

மா கன்றுகள், சம்பங்கி விதை கிழங்குகள் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மா கன்று ரகங்களான அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந், பெங்களூரா, சேலம் பெங்களூரா, நீலம் உள்ளிட்ட மா கன்று ரகங்கள் நடவு செய்ய விற்பனைக்குத் தயாராக உள்ளன.

காய்கறி விதைகளான தக்காளி, கடலை, பாகல், பூசணி, பரங்கி, சிறுகீரை, தண்டுக்கீரை, செடிமுருங்கை, அவரை செடி விதைகள், சம்பங்கி விதை கிழங்கு ரகங்கள் போன்றவையும், காய்கறி விதைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் முழுத் தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடகத்துக்கு விரட்டப்பட்ட யானைகள் ஒசூர் வனக் கோட்டத்துக்கு வந்தன

**ஒசூர்,**

ஒசூர் வனக் கோட்டத்திலிருந்து கர்நாடக வனப் பகுதிக்கு விரட்டப்பட்ட யானைகள், ஒசூர் அருகேயுள்ள சானமாவு வனப் பகுதிக்கு மீண்டும் வருவதால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

கர்நாடக வனப் பகுதியிலிருந்து ஒசூர் வனக் கோட்டத்துக்கு வந்த யானைகள் கூட்டம் கடந்த சில மாதங்களாக மலையடிவாரக் கிராமங்களில் பயிர்களை சேதப்படுத்தின.

இந்த நிலையில், வனத் துறையினரின் கடும் முயற்சியால் சுமார் 50 யானைகள் கர்நாடக வனப் பகுதிக்கு விரட்டப்பட்டன.

ஆனால், கர்நாடக வனப் பகுதியில் நிலவும் வறட்சியால், ஒசூர் வனக் கோட்டம், ஜவளகிரி வனப் பகுதிக்கு அந்த யானைகள் மீண்டும் வந்தன.

ஜவளகிரி வனப் பகுதியையொட்டியுள்ள கிராமங்களில் விளைநிலங்களில் புகுந்த யானைகள் பயிர்களை சேதப்படுத்தின. தற்போது இந்த யானைகள் தேன்கனிக்கோட்டை நொகனூர் வனப் பகுதிக்குள் வியாழக்கிழமை புகுந்தன. அங்கிருந்து வெள்ளிக்கிழமை புறப்பட்ட யானைகள் கெலமங்கலம் அருகே உள்ள வட்டவடிவு பாறையில் முகாமிட்டுள்ளன.

யானைகள் வேகமாக இடம் பெயர்ந்துள்ளதால் வனத்துறையினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். வெள்ளிக்கிழமை இரவுக்குள் அவை ஒசூரை அடுத்துள்ள சானமாவு பகுதிக்கு வந்துவிடும். அங்கு தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. மேலும், சுற்றுப்புற பகுதிகளில் வயல்களில் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**களியக்காவிளையில் மிதமான மழை**

**களியக்காவிளை**:

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு மிதமான மழை பெய்தது. இப்பகுதியில் சில நாள்களாக கடும் வெப்பம் நிலவுகிறது. இந்நிலையில் வெள்ளிக்கிழமை மாலை களியக்காவிளை, படந்தாலுமூடு சுற்றுவட்டாரப் பகுதியில் வானம் மேகமூட்டமாகக் காணப்பட்டது. இரவு 7 மணியளவில் அரை மணி நேரத்துக்கு மிதமான மழை பெய்தது. இந்த திடீர் மழையால் இப்பகுதியில் வெப்பம் ஓரளவு தணிந்தது.

## நெல்லை மாவட்டத்தில் பிசான சாகுபடி அறுவடை தீவிரம்: 2 மேனி வரை மகசூல்!

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான பருவ சாகுபடி அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதுவரை 60 சதவிகிதம் அறுவடை நிறைவடைந்துள்ளது. 2 மேனி வரை மகசூல் கிடைப்பதாக வேளாண்துறை இணை இயக்குநர் கி. சௌந்திரராஜன் தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்டத்தில், நிகழ் பிசான பருவத்தில் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. அம்பை 16, ஆடுதுறை 45, டீலக்ஸ் பொன்னி, கர்நாடகா பொன்னி போன்ற நெல் ரகங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. மார்ச் முதல் வாரத்தில் அறுவடை செய்யும் பணி

தொடங்கியது. தென்காசி, செங்கோட்டை பகுதியில் அறுவடை முடிவடைந்த நிலையில் கடையம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி பகுதியில் அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

விலை இல்லை: அறுவடை நடைபெறும் வயலுக்கே சென்று வியாபாரிகள் நெல்லை கொள்முதல் செய்து வருகின்றனர். 150 கிலோவுக்கு ரூ.1,900 முதல் ரூ.2,000 வரை கொள்முதல் செய்வதாக விவசாயிகள் தெரிவித்தனர். இப்பருவத்தில் ஒன்றரை முதல் 2 மேனி வரை மகசூல் கிடைத்த போதிலும் நெல்லுக்கு விலை இல்லாததால் லாபம் கிடைக்கவில்லை என்றார் மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து.

நல்ல மகசூல்: "திருநெல்வேலி மாவட்டத்தில் 60 சதவிகிதம் அறுவடை முடிவடைந்துள்ளது. ஏப்ரல் முதல் வாரத்தில் முழுமையாக அறுவடை நிறைவு பெறும். கடையம் பகுதியில் அறுவடை செய்யப்படும் "திருச்சி 1' ரக நெல் 2 மேனி வரை கிடைத்துள்ளது. அதாவது ஒரு ஹெக்டேருக்கு 8 டன் முதல் 11 டன் வரை நெல் கிடைத்து வருகிறது என்றார் வேளாண் இணை இயக்குநர் கி. சௌந்திரராஜன்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இரு தினங்களுக்கு ஆங்காங்கே மழை

**சென்னை**: வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை மறைந்த நிலையில், கன்னியாகுமரி அருகில், கடல் பகுதியில், காற்று மேலடுக்கு சுழற்சி உருவானது; தொடர்ந்து அப்பகுதியிலேயே நீடித்து வரும் இது, அடுத்த, 24 மணி நேரத்தில் வலுவிழக்கும் என்றும் கூறப்படுகிறது. காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று காலை நிலவரப்படி, தமிழகத்தின், ஒரு சில பகுதிகளில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நெல்லை தென்காசியில், 7 செ.மீ., மழையும், தேனி பெரியகுளம் மற்றும் போடி, 5, நெல்லை ஆயகுடி, தேனி அரண்மனைபுதூர், திண்டுக்கல்

நிலக்கோட்டை 1 செ.மீ., என, மழை பதிவாகியுள்ளது. மேலும், இரண்டு நாட்களுக்கு தமிழத்தில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்; அதன் பின், வறண்ட வானிலையே நிலவும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. சென்னையைபொறுத்த வரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை அதிகபட்சமாக, 35 டிகிரி, குறைந்த பட்சம், 25 டிகிரி செல்சியசாகவும் பதிவாகும்.

## கடும் வெப்பத்தால் வாழை விலை மந்தம்

**சத்தியமங்கலம்**: சத்தியமங்கலம் பகுதியில் கடும் வெப்பம் வீசி வருவதால், வாழையின் விலை குறைந்துள்ளது. சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதியில், 5,000 ஏக்கருக்கு மேல், விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். கதளி, நேந்திரம், செவ்வாழை, பூவன், ரஸ்தாளி உள்ளிட்ட ரகங்கள் முக்கியத்துவம் பெற்றதாகும். இப்பகுதியில் விளையும் வாழைகளை, சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ள தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், இங்கு ஏலம் நடக்கும். இந்த ஏலத்தில், ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்தும், வியாபாரிகள் வாழை தார்களை ஏலம் எடுக்க ஆர்வத்துடன் வருவர். நேற்று நடந்த ஏலத்தில், கதளி மற்றும் நேந்திரம் வாழை, பத்து டன் விற்பனைக்கு வந்தது. கடந்த, ஜனவரி மாதம் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனையான கதளி மற்றும் நேந்திரம், நேற்று கிலோ, 20 ரூபாய்க்கு விற்பனையானது. இதேபோல், அனைத்து ரக வாழை தார்களும், நேற்று விலை சற்று குறைவாகவே விற்பனையானது. தற்போது, சத்தியமங்கலம் பகுதியில் கடும் வெப்பம் வீசி வருவதால், தர்பூசணி மற்றும் வெள்ளிரி போன்றவை, அதிகமாக விற்பனைவதால், வாழையின் விலை குறைந்துள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர். நேற்று நடந்த ஏலத்தில், ஆறு லட்சத்துக்கு வாழை விற்பனையானது.

**கால்நடைகளுக்கு 97 டன் வைக்கோல் உலர் தீவன கிடங்கு மூலம் விற்பனை**

**ஈரோடு**: ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில், தீவன பற்றாக்குறையை சமாளிக்க, 97 டன் வைக்கோல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி காலத்தில், பால் உற்பத்தியை அதிகரிக்க, பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் இன்றியமையாதது. வறட்சி காலத்தில், பசுந்தீவனம் பற்றாக்குறை ஏற்படும்போது, கால்நடை வளர்ப்போர், உலர் தீவனத்தை நம்பி உள்ளனர்.

விவசாயிகளுக்கு உலர் தீவனம் வெளிச்சந்தையில், பற்றாக்குறையாக உள்ளது. அதை சரிக்கட்ட, கால்நடை பராமரிப்பு துறை மூலம், உலர்தீவன விற்பனை மையம் அமைக்க, தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டது.

தீவன பற்றாக்குறையால் ஏற்படும் பால் உற்பத்தி இழப்பை ஈடுகட்டவும், கால்நடை வளர்க்கும், சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்கவும், கால்நடைகள் வளர்க்கும் தொழிலை, விவசாயிகள் வறட்சி காலத்திலும், லாபகரமாக நடத்திடும் வகையில், தமிழகம் முழுவதும், உலர்தீவன மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 12.50 கோடி ரூபாய் செலவில், தமிழகத்தில், 125 உலர் தீவன மையங்கள் அமைக்கக்கப்பட்டுள்ளது. இம்மையங்களுக்கு, வைக்கோல் உபரியாக உள்ள விவசாயிகள், வியாபாரிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு, தேவையான கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படுகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய், என மானிய விலையில் விற்கப்படுகிறது.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில், இத்திட்டம் துவங்கியது முதல், பெருந்துறை, எழுமாத்தூர், பொலவக்காளிபாளையம், பவானி, நம்பியூர், புஞ்சை புளியம்பட்டி உள்ளிட்ட, ஆறு கிடங்கின் மூலம், மொத்தம், 97 டன் வைக்கோல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விற்பனைக்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

**மதுரை அருகே ஆச்சரியப்படுத்தும் முருங்கை கிராமம்;விளைச்சல் விர்ர்... விலையில் சர்ர்....**




**கட்டப்புளிநகர் :** மதுரை சமயநல்லுார் அருகே கட்டப்புளி நகரில் முருங்கை விளைச்சல் அமோகமாக இருக்கிறது. விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நிலத்தடி நீர் அபாய கட்டத்தை கடந்து விட்டதாக உசிலம்பட்டி, சிட்டம்பட்டி, திருமங்கலம்

பகுதிகளை பொதுப்பணித்துறை அறிவித்துள்ளது. எனவே, இங்கு புதிய போர்வெல், கிணறுகள் தோண்ட விதிக்கப்பட்டுள்ளது. வாடிப்பட்டி, மேலுார், கொட்டாம்பட்டி பகுதிகளில் அபாய கட்டத்தை எட்டவில்லை. இங்கு, ஓரளவு நிலத்தடி நீர் உள்ளதாக பொதுப்பணித்துறை அறிவித்துள்ளது.சமயநல்லுார் அருகே கட்டப்புளி நகரில் கிணற்று நீர் பாசனம் மூலம் ஆண்டுக்கு இருபோகம் நெல் விவசாயம் நடக்கிறது. தவிர, மழைக்காலங்களில் நிரம்பும் தோடனேரி கண்மாய் மூலம் 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இங்கு வீடுகள் தோறும் தோட்டம் அமைத்து வீட்டுக்கு தேவையான காய்கறிளை உற்பத்தி செய்கின்றனர். பெரும்பாலோனோர் பண்டமாற்று முறைப்படி காய்கறிகளை பறிமாறி கொள்கின்றனர்.சந்திரா கூறுகையில், "இங்கு வீடுகள் தோறும் நாட்டு முருங்கை மரம் வளர்க்கப்படுகிறது. சீசன் நேரத்தில் முருங்கைக்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. எங்கள் ஊரை 'முருங்கை கிராமம்' எனவும் கூறுவர். இங்குள்ள மண்ணின் தன்மையால் முருங்கையின் ருசி நன்றாக இருக்கும்.

பூச்சிக்கொல்லி மருந்து, உரம் போன்ற எதுவும் செய்வதில்லை. காய் ஒன்று ரூ.6 முதல் ரூ.8 வரை விற்றது. இப்போது விலை குறைந்துள்ளது. ஆனால், மவுசு குறையவில்லை," என்றார்.

## எள் செடிகள் வளர்ச்சி விவசாயிகள் மகிழ்ச்சி

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் பயிரிட்டுள்ள எள் செடிகள் செழிப்பாக வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் மழையளவு குறைந்ததால் விவசாயிகள் குறுகிய கால பயிருக்கு மாறி வருகின்றனர். பருவ மழை குறைந்து நிலத்தடி நீர் வ ளம் பெருகவில்லை. இதனால் கிணறு, போர்வெல்களில் சொட்டு நீர் பாசன முறையில் குறைந்த தண்ணீரை பயன்படுத்தி விவசாயம் செய்கின்றனர். மக்காச்சோளம், உளுந்து, எள், வெங்காயம் போன்ற குறுகிய கால பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ள்ளக்குறிச்சி தச்சூர் பகுதியில் சாகுபடி செய்துள்ள எள் செடிகளில் பூக்கள் பூத்து, செழிப்பாக உள்ளன. ஏக்கருக்கு 600 கிலோ வரை மகசூல் கிடைக்கும். இந்த செடிகளுக்கு பராமரிப்பு அதிகம் தேவையில்லை. குறைந்தளவு செலவினத்தில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டம் வத்தல் மலையில் நடந்த, கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமை, கால்நடைத்துறை உதவி இயக்குனர் ஆய்வு செய்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புதுறையின் மூலம், கடந்த,1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ், கோமாரி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கடந்த, 20 நாட்களில், இரண்டு லட்சத்து, 96 ஆயிரம் கால்நடைகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம், திப்பிரெட்டிப்பட்டிஅள்ளி ஊராட்சி வத்தல்மலையில் உள்ள மாடு மற்றும் எருமைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் நடந்தது.

சின்னங்காடு, ஒன்றியக்காடு,பெரியூர் உள்ளிட்ட கிராமங்களில், 635 மாடு மற்றும் எருமைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இப்பணிகளை, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர்கள் ஜெகன்நாதன், இளங்கோவன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

## வறட்சியால் காயும் மாவட்ட அணைகள் மழைக்கு முன் நடவடிக்கை தேவை

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், அணை, ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளில், தண்ணீர் மட்டம் கடுமையாக சரிந்து வருவதால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் கிராமங்கள் மற்றும் மலைக் கிராமங்களை அதிகம் கொண்ட மாவட்டம் ஆகும். மேலும், விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. மாவட்டத்தில் வாணியாறு அணை, தொப்பையாறு அணை, பஞ்சப்பள்ளி அணை, நாகவதி அணை, வரட்டாறு அணை, கேசர் குழி அணை, தும்பலஹள்ளி அணை என மொத்தம், ஏழு அணைகள் உள்ளன.

மேலும், பொதுப்பணித்துறை சார்பாக, 73 ஏரிகளும், பஞ்சாயத்துக்களில், 70க்கும் மேற்பட்ட ஏரி குளங்களும் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக, தர்மபுரி மாவட்டத்தில், போதிய பருவ மழை பெய்யாததால், மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு தண்ணீர் வரத்து கேள்வி குறியாக உள்ளது.

மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களுக்கு, மழை நீர் வரும் கால்வாய்கள், பல இடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்ரமிப்பு காரணமாக ஏரி, குளங்களுக்கு மழைக் காலங்களில், தண்ணீர் முழுமையாக சென்றடையாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அணை மற்றும் ஏரிகள் மூலம் பாசன வசதி பெறும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக வெயிலின் அளவு, 100 டிகிரியை தாண்டி உள்ளதால், நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. குறிப்பாக, போதிய பருமழை இல்லாததாலும், கொளுத்தி வரும் வெயிலின் காரணமாக, 14.6 அடி உயரம் கொண்ட தும்பலஹள்ளி அணையில், தற்போது தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகிறது. 65 அடி உயரம் கொண்ட வாணியாறு அணையில், தற்போது, 5.25 அடி தண்ணீர் மட்டும் உள்ளது. மேலும், 24.60 அடி

உயரம் கொண்ட நாகவதி அணையில் தற்போது, 5.57 அடியும், 25.20 அடி உயரம் கொண்ட கேசர்குழி அணையில், தற்போது, 7.87 அடி தண்ணீரும், 50 அடி உயரம் கொண்ட பஞ்சப்பள்ளி அணையில், தற்போது, 17.88 அடி தண்ணீரும் உள்ளது. 50.18 அடி உயரம் கொண்ட தொப்பையாறு அணையில் தற்போது, 21.15 அடி தண்ணீர் உள்ளது.

மாவட்டத்தில், அதிகபட்சமாக வரட்டாறு அணையில், 22.33 அடி தண்ணீர் உள்ளது. பெரும்பாலான ஏரி, குளங்கள் வறண்டு விட்டன. பருவ மழை துவங்க, இரண்டு மாதத்துக்கும் மேல் உள்ளதால், அணை, ஏரி, குளங்களில் உள்ள தண்ணீரின் அளவு கடுமையாக பாதிக்கப்படும் நிலை உள்ளது. தற்போது, விவசாய கிணறுகள் நீர் மட்டம் குறைந்து வருவதாலும், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பருவ மழை துவங்கும் முன், மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்களுக்கு மழைநீர் வரும் கால்வாய்களை சீரமைக்கவும், ஆக்கிரமிப்புக்களை அகற்றவும், மாவட்ட நிர்வாகத்துக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கடும் வெப்பத்தால் வாழை விலை மந்தம்

**சத்தியமங்கலம்:** சத்தியமங்கலம் பகுதியில் கடும் வெப்பம் வீசி வருவதால், வாழையின் விலை குறைந்துள்ளது. சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதியில், 5,000 ஏக்கருக்கு மேல், விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். கதளி, நேந்திரம், செவ்வாழை, பூவன், ரஸ்தாளி உள்ளிட்ட ரகங்கள் முக்கியத்துவம் பெற்றதாகும். இப்பகுதியில் விளையும் வாழைகளை, சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ள தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், இங்கு ஏலம் நடக்கும். இந்த ஏலத்தில், ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இருந்தும், வியாபாரிகள் வாழை தார்களை ஏலம் எடுக்க ஆர்வத்துடன் வருவர். நேற்று நடந்த ஏலத்தில், கதளி மற்றும் நேந்திரம் வாழை,

பத்து டன் விற்பனைக்கு வந்தது. கடந்த, ஜனவரி மாதம் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனையான கதளி மற்றும் நேந்திரம், நேற்று கிலோ, 20 ரூபாய்க்கு விற்பனையானது. இதேபோல், அனைத்து ரக வாழை தார்களும், நேற்று விலை சற்று குறைவாகவே விற்பனையானது. தற்போது, சத்தியமங்கலம் பகுதியில் கடும் வெப்பம் வீசி வருவதால், தர்பூசணி மற்றும் வெள்ளிரி போன்றவை, அதிகமாக விற்பனைவதால், வாழையின் விலை குறைந்துள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர். நேற்று நடந்த ஏலத்தில், ஆறு லட்சத்துக்கு வாழை விற்பனையானது.

## ரண்மேல் ஆடு வளர்ப்பு வரும் 25ம் தேதி பயிற்சி

**கரூர்**: "பரண்மேல் ஆடுவளர்ப்பு குறித்த ஒருநாள் வளாக பயிற்சி வரும், 25ம் தேதி நடக்கும்' என, கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் அகிலா தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ் பரண்மேல் ஆடு வளர்ப்பு ஒரு நாள் பயிற்சி முகாம், 25ம் தேதி நடக்கிறது.

இதில், ஆடுகளுக்கு பரண் முறையில் கொட்டகை அமைப்பு, ஆடுகளை தேர்வு செய்தல், தீவன பராமரிப்பு, நோய்தடுப்பு முறை, இதர பராமரிப்பு முறை, பொருளாதாரம் மற்றும் பரண்மேல் ஆடுவளர்ப்பில் உள சாதக பாதகங்கள் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில், கலந்துகொள்வோர் காலை, 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வர வேண்டும். மதியஉணவு, பயிற்சிக்கான பொருட்கள் வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் தொலைபேசி எண், 04324-294335 தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 1,113 டன் நெல் மூட்டை சரக்கு ரயிலில் பயணம்

**தஞ்சாவூர்:** தமிழகத்தில், குறிப்பாக டெல்டாவிலுள்ள திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் அதிகளவில் காவிரி பாசனத்தை நம்பி நெல் விளைவிக்கப்படுகிறது.

பருவமழை மற்றும் காவிரி நீரை மூலாதாரமாக கொண்டு கரும்பு, நெல் விவசாயம் நடக்கிறது.

இதனை நம்பி பல லட்சக்கணக்கான தொழிலாளர், விவசாய குடும்பத்தினர் உள்ளனர். தஞ்சை, திருவாரூரில் விளையும் நெல், அந்தந்த பகுதியிலுள்ள நேரடி கொள்முதல் நிலையங்களில் அரசு நிர்ணயித்த விலையில் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும்.

பின்னர், கொள்முதல் நிலையங்களில் இருந்து மத்திய சேமிப்பு கிடங்குக்கு லாரிகளில் நெல்மூட்டை எடுத்து செல்லப்பட்டு பத்திரப்படுத்தப்படும். இங்கிருந்து, அவ்வப்போது வெளிமாவட்டம், வெளிமாநிலத்துக்கு சரக்கு ரயிலில் நெல்மூட்டைகள் அரவைக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதன்படி, தஞ்சை மத்திய சேமிப்பு கிடங்கில் இருந்து, கடந்த 20ம் தேதி ஆயிரத்து 113 டன் நெல் மூட்டைகள், தஞ்சை ரயில்வே ஸ்டேஷனுக்கு லாரிகளில் கொண்டு வரப்பட்டது.

இங்கிருந்து, சரக்கு ரயிலில் 29 வேகன்களில் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டு, அரவை பணிக்காக சென்னைக்கு தஞ்சை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உற்பத்தி பொருட்களில் இனி விவசாயத்துக்குதான் கிராக்கி



**புதுடெல்லி**: பல ஆண்டுகளாகவே வேளாண் உற்பத்தி பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது. மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப, நடுத்தர வர்க்கத்தினரிடையே உணவு தேவை அதிகரித்துள்ளது. ஒரு காலத்தில் குறைந்த விலைக்கு விற்ற உணவுப்பொருட்கள் இன்று விண்ணை தொடும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. சாதாரண மக்கள் முன்பு வாங்கி வந்த உணவு தொடர்பான மாதாந்திர பொருட்களின் விலை இன்று பல மடங்கு கூடிவிட்டது. இந்த விளைபொருட் களை பாதுகாக்க குளிர்பதன கிடங்குகள் இல்லாததால் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு பொருட்கள் நாசமாகிறது. இதனாலும் பொருளாதார அளவில் பெரிய இழப்பு ஏற்படுகிறது. எனவேதான் குளிர்பதன கிடங்குகள் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாட்களாக உள்ளது. பொதுவாகவே விவசாய உற்பத்தியை பொறுத்தவரை தமிழகம், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன. மகாராஷ்டிரா எப்போதும் முதலிடத்தில் உள்ளது. சமீபத்தில் மத்திய அமைச்சர் சரத்பவார், விவசாய உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளதை பெருமையுடன் குறிப்பிட்டிருந்தார். உணவு தானிய உற்பத்தியில் இந்தியா உலக அளவில் 2வது இடத்தில் இருக்கிறது. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் சரிவு ஏற்பட்டபோதும், அதை ஈடுகட்டி பொருளாதாரத்துக்கு பக்கபலமாக விவசாயம் சார்ந்த துறைகளே இருந்து வந்தன.

இந்நிலையில், உணவு தானியங்களின் தேவை அதிகரிப்பு காரணமாக, இதுவரை தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் மீதான மோகத்தை பின்னுக்கு தள்ளி, உணவு பொருட்கள் முக்கிய இடத்தை பிடிக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எச்எஸ்பிசி குளோபர் சர்ச் ஆய்வின்படி, வரும் 2030ம் ஆண்டில் நடுத்தர வருவாய் பிரிவினர் 130 கோடியாக இருப்பார்கள். இதுவே, 2050ம் ஆண்டில் நடுத்தர வருவாய் பிரிவினரின் எண்ணிக்கை 260 கோடியாக உயரும் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. நடுத்தர வருவாய் பிரிவினரின் எண்ணிக்கை அதிகரிப்பதால், லத்தீன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் மாமிச உணவு தேவையும் அதிகரிக்கும். சீனாவில் பால் உற்பத்தி பொருட்களின் தேவை குறுகிய காலத்திலேயே வளர்ச்சி அடையும். அதுமட்டுமின்றி, சர்க்கரை தேவை அதிகரிப்பது பிரேசிலில் உள்ள உற்பத்தியாளர்களுக் கும், பாமாயில் தேவை அதிகரிப்பது ஆஸ்திரேலியாவில் உள்ள உற்பத்தியாளர்களுக்கு சாதகமாக அமையும். பருவநிலை மாற்றங்கள், சுற்றுச்சூழல் பாதிப் பால் உணவு தானியங்கள், விலங்குகள் சார்ந்த உணவு பொருட்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக, உலக நாடுகளில் தண்ணீர் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் சீர்கேட்டால் சீனா பெரும் பிரச்னை களை சந்திக்க நேரிடும் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

**காலிபிளவர் விலை உயர்வு**



**சேலம்**: பெங்களூர், ஒசூர், ராயக்கோட்டை ஆகிய இடங்களில் இருந்து காலிபிளவர் சேலம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வருகிறது. மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்கள் காலிபிளவர் சீசனாகும்.

சேலம் மார்க்கெட்டிற்கு தினமும் 5 ஆயிரம் பூக்களுக்கு மேல் விற்பனைக்கு வந்தது. இதனால் ஒரு பூ ரூ10 வரை விற்கப்பட்டது.

இந்நிலையில், சீசன் முடிந்ததால் மார்க்கெட்டிற்கு காலிபிளவர் வரத்து குறைந்து தினமும் ஆயிரம் பூக்கள் மட்டுமே வருகிறது.

இதனால் கடந்த ஒரு வாரத்தில் காலிபிளவர் விலை ரூ10 வரை அதிகரித்துள்ளது. தற்போது காலிபிளவர் அளவை பொறுத்து ரூ20 முதல் ரூ30 வரை விற்கப்படுகிறது.

'சீசன் முடிந்துள்ளதால் காலிபிளவர் விலை அதிகரிக்கும்' என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தேயிலை விற்பனை சரிவு**



**கோவை:** கோவை தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டின் 12வது ஏலம் நேற்று நடந்தது. இதில் உள்ளூர் ரகம்(டஸ்ட்) 2.89 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.58 லட்சம் கிலோ விற்பனையானது.

சராசரி விற்பனை விலை கிலோ ரூ87.06. விற்பனை மதிப்பு ரூ1.38 கோடி. ஏற்றுமதி ரகம்(லீப்) 1.55 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது.

இதில் 98 ஆயிரம் கிலோ விற்பனையானது. சராசரி விற்பனை விலை கிலோ ரூ77.82. விற்பனை மதிப்பு ரூ76 லட்சம்.

கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் உள்ளூர் ரகம் வரத்து 44 ஆயிரம் கிலோவும், விற்பனை 40 ஆயிரம் கிலோவாக இருந்தது. விற்பனை விலை ரூ2.97 குறைந்துள்ளது. ஏற்றுமதி ரகம் வரத்து 33 ஆயிரம் கிலோவும், விற்பனை 23 ஆயிரம் கிலோவும் இருந்தது.

விற்பனை விலை 91 பைசா குறைந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்த வாரம் ரூ2.14 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தைவிட ரூ60 லட்சம் குறைவு.

**விவசாய தொழிற்பயிற்சி நிறைவு விழா**

**பூம்புகார்**, : நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் மீன்ஆராய்ச்சி மையத்தில் மீன்ஆராய்ச்சி மையம் மற்றும் மயிலாடுதுறை இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பில் கடந்த 5ம் தேதி முதல் 20ம் தேதிவரை விவசாயம் சார்ந்த தொழிற்பயிற்சிகள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிறைவுநாள் விழாவிற்கு அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புலம் உழவியல்துறை பேராசிரியர் மயவரம்பன் தலைமை வகித்தார்.

காவிரிப்பூம்பட்டினம் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி மேளாளர் கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தார்.

எம்.எஸ். சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி மைய முதுநிலை வேளாண் ஆராய்ச்சியாளர் செல்வராசு வரவேற்றார்.

எம்.எஸ்.சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி மைய அலுவலர் உன்னிதான், முனைவர் திருப்பதி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பயிற்சியில் கலந்து கொண்ட பெண்கள் உட் பட 30 நபர்களுக்கு பேராசிரியர் இமயவரம்பன் சான்றி தழ் வழங்கி பேசினார்.

முடிவில் எம்.எஸ்.சுவாமி நாதன் மீன் ஆராய்ச்சி மைய அலுவலர் செல்வகணபதி நன்றி கூறினார்.

இதில் மீனவ மகளிர் சுய உதவிக்குழுவினர், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோழிப்பண்ணையாளர்கள் கோடைகால பராமரிப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்**

**நாமக்கல்,**

கோழிப்பண்ணையாளர்கள், கோடைகால பராமரிப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும் என நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை) முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

இன்று முதல் அடுத்த 4 நாட்கள் வானம் தெளிவான மேக மூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு முறையே 6, 7, 7, 6 கி.மீ. வேகத்தில் இருக்கும். தெற்கு, தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 100.4 டிகிரியாகவும், குறைந்த பட்சமாக 75.2 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 73, 72, 70, 71 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 15, 12, 11, 10 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்பு வானிலை

இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட சிறப்பு வானிலையில் வானம் தெளிவான மேகமூட்டத்துடனும், மழையற்றும் காணப்படும். அதிகபட்ச

மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை அளவுகள் முறையே 100.4 டிகிரி மற்றும் 75.2 டிகிரியாக நிலவும். காற்றின் வேகம் மணிக்கு 6 - 7 கி.மீ. என்ற அளவில் பெரும்பாலும் தெற்கு திசையில் இருந்து வீசும். காற்றின் ஈரப்பதம் 10 - 73 சதவீதமாக இருக்கும். கோடை தொடங்கிய நிலையில் பகல் வெப்ப அளவு 100.4 டிகிரியை தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரவு வெப்ப அளவும் 75.2 டிகிரியை ஒட்டியே நிலவும். இனி தீவன எடுப்பு குறைவதும், முட்டை உற்பத்தி குறைவதும், முட்டையின் எடை குறைவதும் தொடங்கும். இதனை ஓரவவு தவிர்க்கும் வகையில் முன் எச்சரிக்கையாக தீவனத்தில் அமினோ அமிலங்கள் குறிப்பாக மித்தியொனின் மற்றும் லைசின் சேர்க்கவேண்டும். மேலும் திவனத்தில் எலக்ட்ரோலைட் மற்றும் சோடா உப்பு அவசியம் சேர்க்கவும்.

கோழியின நோய் ஆய்வகம்

கடந்த வாரம் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் மேல்மூச்சுக்குழாய் மற்றும் இராணிக்கெட் நோய்களினால் இறந்திருப்பது தெரியவந்து உள்ளது. மேலும் கடந்த வாரம் வெப்ப அயற்சியின் தாக்கமும் தென்பட்டது. எனவே பண்ணையாளர்கள் கோடைகால பராமரிப்பு முறைகள், இராணிக்கெட் நோய் தடுப்பூசி அளித்தல் மற்றும் பண்ணை உயிர் பாதுகாப்பு முறைகள் போன்றவற்றை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**தர்மபுரி மாவட்டத்திற்கு சரக்கு ரெயிலில் 2100 டன் நெல் வருகை**



தர்மபுரிக்கு ரெயிலில் வந்த நெல்மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்படும் காட்சி.

தர்மபுரி மாவட்டத்திற்கு சரக்கு ரெயிலில் 2100 டன் நெல் வந்தது. இந்த நெல் மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு அரவை மில்களுக்கு அனுப்பப்பட்டன.

நெல் மூட்டைகள் வருகை

தர்மபுரி மாவட்டத்தில் நுகர்வோரின் பயன்பாட்டிற்காக அவ்வப்போது நெல்மூட்டைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படுவது வழக்கம். இவ்வாறு கொண்டு வரப்படும் நெல் மூட்டைகள் மாவட்டத்தில் உள்ள திறந்தவெளி மையங்கள் மற்றும் அரசு கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும்.

அதன்பின்னர் தேவைக்கேற்ப அரிசி அரவை ஆலைகளுக்கு அனுப்பபடும். இந்த நிலையில் திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் இருந்து சரக்கு ரெயிலில் 2100 டன் நெல் நேற்று தர்மபுரிக்கு கொண்டு வரப்பட்டது. தர்மபுரி ரெயில் நிலையத்தில் நின்ற சரக்கு ரெயிலில் இருந்து நெல்மூட்டைகளை லாரிகளில் ஏற்றும் பணி நடந்தது.

ரேஷன் கடைகள்

இதனைத்தொடர்ந்து தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நெல்அரவை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன.

இந்த நெல் மூட்டைகள் அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அரவை ஆலைகளில்அரைக்கப்பட்டு அரிசியாக மாற்றப்படும். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள நுகர்பொருள்வாணிப கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்படும்.

அதன்பின்னர் தேவைக்கேற்ப அங்கிருந்து லாரிகளில் ரேஷன்கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ரேஷன் கடைகளில் ரேஷன்கார்டுதாரர்களுக்கு வினியோகிக்கப்படும்.

**ஊஞ்சலுர் பகுதியில் மஞ்சள் அறுவடை பணிகளுக்கு நீண்ட தூரம் குழாய் அமைத்து தண்ணீர் கொண்டுவரும் விவசாயிகள்**



**ஊஞ்சலூர்,**

ஊஞ்சலுர் பகுதியில் மஞ்சள் அறுவடை பணிகளுக்கு நீண்ட தூரம் குழாய் அமைத்து விவசாயிகள் தண்ணீர் கொண்டு வருகிறார்கள்.

<u>தண்ணீர் நிறுத்தப்பட்டது</u>

காலிங்கராயன் வாய்க்கால் மூலம் 15 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவிலான பயிர்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இதில் நெல், கரும்பு, மஞ்சள், வாழை போன்ற பயிர்கள் சுழற்சி முறையில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. ஊஞ்சலூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் மட்டும் சுமார் 5 ஏக்கர் விளைநிலங்கள் காலிங்கராயன் வாய்க்கால் நீரை நம்பி உள்ளன.

தற்போது கான்கிரீட் அமைக்கும் பணிக்காகவும், பவானிசாகர் அணையில் நீர்மட்டம் குறைவாக உள்ளதாலும் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டது.

இதனை கண்டித்து ஆயிரக்கணக்கான காலிங்கராயன் விவசாயிகள் பயிர்களை காப்பாற்ற உயிர்தண்ணீர் விடக்கோரி கருமாண்டம்பாளையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தநிலையில் தற்போது மஞ்சள் செடிகள் அறுவடைக்கு தயாராக உள்ளன. ஏராளமான செடிகள் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலையில் உள்ளன.

அதனால், அறுவடையும் செய்யமுடியாமல், பயிரை காப்பாற்றவும் முடியாமல் விவசாயிகள் பரிதவிப்பில் உள்ளார்.

<u>குழாய் மூலம்</u>

கிணறு வைத்திருக்கும் விவசாயிகள், அந்த தண்ணீரை நிலத்தில் பாய்ச்சி ஓரளவு சமாளித்துகொள்கிறார்கள். கிணறு இல்லாத விவசாயிகள் பலர் தங்களுக்கு எந்த இடத்தில் சொந்த கிணறு உள்ளதோ? அல்லது உறவினர்களுக்கு சொந்தமான கிணறுகளில் இருந்தோ தண்ணீரையோ குழாய் அமைத்து நிலத்துக்கு கொண்டு வருகிறார்கள். இதற்காக சில விவசாயிகள் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரை கூட சில விவசாயிகள் காய்ந்து கிடக்கும் வாய்க்காலுக்குள் குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள்.

மின்பற்றாக்குறையால் சில விவசாயிகள் டீசல் என்ஜினை பயன்படுத்தி பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

சில விவசாயிகள் வருணபகவான் மழையை பொழிவாரா என்று கவலையுடன் உள்ளனர். இன்னும் 10 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட்டால் கூட பெரும் இழப்பில் இருந்து விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள் என்று கூறுகின்றனர்.

**கொப்பரை தேங்காய் உற்பத்தி பாதிப்பு கோபிசெட்டிபாளையம்,**



கோபி பகுதியில் தேங்காய் விளைச்சல் குறைந்ததால் கொப்பரை தேங்காய் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>உற்பத்தி பாதிப்பு</u>

கோபிசெட்டிபாளையம், சிறுவலூர், காசிப்பாளையம், அளுக்குளி, பங்களாப்புதூர், கள்ளிப்பட்டி, வெள்ளாங்கோவில் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதியில் ஏராளமான தென்னை மரங்கள் உள்ளன. இந்த பகுதி விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை அதிகஅளவில் உற்பத்தி செய்து வருகிறார்கள். வறட்சி நிலவி வருவதால் தென்னை மரங்களில் மகசூல் குறைந்து உள்ளது. பல்வேறு இடங்களில் தென்னை மரங்கள் கருகி விட்டன.

ஈரோடு மாவட்டத்தில் தேங்காய்களின் விளைச்சல் குறைந்ததை தொடர்ந்து கொப்பரை தேங்காய் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. கோபிசெட்டிபாளையம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு 400 முதல் 500 மூட்டைகள் வரை கொப்பரை தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருவார்கள். ஆனால் தற்போது 200 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

<u>விலை உயர்வு</u>

ஊத்துக்குளி, காங்கயம் பகுதிகளில் எண்ணெய் தயாரிக்கும் மில்கள் அதிகமாக உள்ளன. எனவே கொப்பரை தேங்காயின் தேவை அதிகரித்து இருக்கிறது. இந்தநிலையில் கொப்பரை தேங்காயின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்து உள்ளது. கடந்த 3 மாதங்களாக கொப்பரை தேங்காய் ஒரு குவிண்டாலுக்கு ரூ.8 ஆயிரத்துக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்திற்கு 194 மூட்டைகள் மட்டுமே விவசாயிகள் கொண்டு வந்திருந்தினர். இதில் ஒரு குவிண்டாலுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 649-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 763-க்கும் விற்பனை ஆனது. சராசரி விலை ரூ.8 ஆயிரத்து 589 ஆகும். மொத்தம் ரூ.8 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

கொப்பரை தேங்காயின் விலை அதிகரித்தாலும், உற்பத்தி குறைந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

**பொறையாறு அருகே மீனவர்கள் வலையில் 1,000 கிலோ ராட்சத மீன் சிக்கியது**



**பொறையாறு,**

பொறையாறு அருகே மீனவர்கள் வலையில் 1,000 கிலோ ராட்சத மீன் சிக்கியது.

**அரிய வகை மீன்**

நாகை மாவட்டம் பொறையாறு அருகே உள்ள சின்னங்குடி மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் கணக்குப்பிள்ளை (வயது 63), ரமேஷ் (42), விஜயபாலன் (35). இவர்கள் 3 பேரும் நேற்றுமுன்தினம் இரவு கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இந்த நிலையில் நேற்று அதிகாலை கரையில் இருந்து 22 கிலோ மீட்டர் தூரத்தில் வலையில் அரிய வகை மீன் ஒன்று சிக்கியது. உடனே மீனவர்கள் 3 பேரும் வலையில் இருந்து அந்த மீனை வெளியே எடுக்க முயற்சி செய்தனர். ஆனால் எடை அதிகமாக இருந்ததால் மீனை வலையில் இருந்து வெளியே எடுக்க முடியவில்லை. இதனை தொடர்ந்து மீனவர்கள், வலையுடன் அந்த அரியவகை மீனை கரைக்கு கொண்டு வந்தனர்.

**பாலூட்டி வகை**

இது குறித்து மீனவர் விஜயபாலன் கூறியதாவது:-

வலையில் சிக்கிய இந்த மீன், சுறா இனத்தை சேர்ந்த பாலூட்டி வகையான கோமலாஸ் என்று அழைக்கப்படும் அரியவகை மீன் ஆகும். இந்த வகையை சேர்ந்த மீன்கள் ஆழ்கடல் பகுதியில் தான் உயிர் வாழும். தற்போது திசைமாறி கரைப்பகுதிக்கு வந்து வலையில் சிக்கி கொண்டது. எங்களால் வலையில் சிக்கிய

இந்த மீனை சமாளிக்க முடியவில்லை. இதனால் வலையில் இருந்து வெளியே எடுத்து கடலிலும் மீனை விட முடியவில்லை. எங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தால் வலையுடன் மீனை இழுத்து கரைக்கு கொண்டு வந்தோம். கரைக்கு கொண்டு வந்த சிறிது நேரத்தில் மீன் இறந்துவிட்டது. ஆயிரம்கிலோ எடை கொண்ட இந்த மீன், 10 அடி நீளமும், 6 அடி அகலமும் இருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

**திருமருகல் ஒன்றியத்தில் 17 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி**

**திருமருகல்,**

திருமருகல் ஒன்றியத்தில் 17 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

**கோமாரி நோய் தடுப்பூசி**

நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி உத்தரவின் படி திருமருகல் ஒன்றியத்தில் கால்நடைகளுக்கு 6-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கடந்த 1-ந் தேதி தொடங்கி நேற்று வரை நடைபெற்றது. ஏனங்குடி மற்றும் திருப்புகலூர் கால்நடை மருந்தக கட்டுப்பாட்டில் உள்ள பண்டாரவாடை ஊராட்சியில் நடைபெற்ற முகாமிற்கு ஊராட்சி மன்ற தலைவர் அசோகன் தலைமை தாங்கினார். முகாமில் கால்நடை மருத்துவர் விஜயகுமார் தலைமையிலான பயிற்சி டாக்டர் இன்பத்தமிழன் அடங்கிய மருத்துவக்குழுவினர் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொண்டனர். இதில் 5 ஆயிரத்து 42 கால்நடைகள் பயன்பெற்றன. முகாமில் ஊராட்சி மன்ற செயலாளர் முருகானந்தம் உள்பட வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதேபோல் திருப்பயத்தங்குடி, கங்களாஞ்சேரி கால்நடை மருந்தக கட்டுப்பாட்டில் உள்ள கீழப்பூதனூர் ஊராட்சியில் நடைபெற்ற முகாமிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் சிவசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். முகாமில் கால்நடை மருத்துவர் ஜீவானந்தம் தலைமையில் மருத்துவர் குழுவினர் கால் நடைகளுக்கு தடுப்பூசி

போடும் பணிகளை மேற்கொண்டனர். இதில் 2 ஆயிரத்து 386 கால்நடைகள் பயன்பெற்றன.

**அம்பல், திட்டச்சேரி**

அம்பல், திட்டச்சேரி கால்நடை மருந்தக கட்டுப்பாட்டில் உள்ள ஊராட்சி பகுதிகளில் நடைபெற்ற முகாம்களில் கால்நடை மருத்துவர் நிறைமொழி தலைமையிலான மருத்துவ குழுவினர் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொண்டனர். முகாமில் 6 ஆயிரத்து 298 கால்நடைகள் பயன்பெற்றன. திருமருகல் கால்நடை மருந்தக கட்டுப்பாட்டில் உள்ள ஊராட்சி பகுதிகளில் கால்நடை மருத்துவர் கணேசன் தலைமையில் தடுப்பூசி பணிகள் போடப்பட்டது. இதில் ஆயிரத்து 442 கால்நடைகள் பயன்பெற்றன. திருமருகல் ஒன்றியம் முழுவதும் உள்ள 39 ஊராட்சி பகுதிகளிலும் 21 நாட்களாக நடைபெற்ற 6-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம்களில் திருமருகல் ஒன்றியத்தில் 17 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்த முகாம்களை கால்நடை சென்னை உதவி இயக்குநர் சரவணபவன், மண்டல இணை இயக்குநர் ராஜசேகர், நாகை உதவி இயக்குநர் ரமேஷ், சிறப்பு அறிஞர் டாக்டர் ரவிச்சந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**முந்திரி சீசன் தொடங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி**



**பண்ருட்டி,**

பண்ருட்டி பகுதியில் முந்திரி சீசன் தொடங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>தானே புயல்</u>

கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி என்றால் நினைவிற்கு வருவது பலா மற்றும் முந்திரி. அந்த வகையில் பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான இடங்களில் முந்திரி மரத்தை காணமுடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் முந்திரி சீசன் ஆகும். இந்த சீசனில் முந்திரிகளை பறித்து விவசாயிகள் உள்ளூர், வெளியூர், வெளிமாநிலத்திற்கு அதிகளவில் ஏற்றுமதி செய்து லாபம் அடைந்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தானே புயலின் தாக்குதலால் பண்ருட்டி பகுதியில் ஏராளமான முந்திரி மரங்கள் வேரோடு சாய்ந்து பாதிப்பு ஏற்பட்டது. முந்திரி விவசாயிகளின் வாழ்க்கையை புரட்டிப்போட்ட இந்த பாதிப்புக்கு பிறகு முந்திரி உற்பத்தி என்பது கேள்விக்குறியானது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

இதையடுத்து, மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மேலும், புயல் பாதிப்பின் போது சில மரங்களின் கிளைகள் மட்டும் உடைந்து பாதிப்படைந்தது. பின்னர் இவை சில நாட்களில் மீண்டும் துளிர்விட்டு நன்கு வளர தொடங்கியது. இருப்பினும், கடந்த 2 ஆண்டுகளாக முந்திரி உற்பத்தி பண்ருட்டியில் கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தது.

இதற்கிடையில், பண்ருட்டி பகுதியில் முந்திரி மரங்களில் பூக்கள் பூத்து தற்போது காய்கள் காய்க்க தொடங்கியது. கடந்த ஆண்டை விட அதிகமாக காய்கள் காய்த்துள்ளதால், முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

<u>7 மூட்டைகள்</u>

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், 'தானே புயலில் சேதமடைந்த முந்திரி மரங்கள் தற்போது நன்கு படர்ந்து விரிந்து வளர்ந்துள்ளன. இதன் காரணமாக அதன் விளைச்சல் கடந்த ஆண்டை விட, நடப்பாண்டில் அதிக அளவில் அதிகரிக்க

வாய்ப்பு உள்ளது. அதன்படி கடந்த ஆண்டு ஏக்கர் ஒன்றுக்கு 3 மூட்டைகள் கிடைத்தது. தற்போது 7 மூட்டையாக உயரும் என தெரிகிறது.

அதே நேரத்தில் தானே புயலுக்கு முன்பு பண்ருட்டி பகுதியில் ஏக்கர் ஒன்றுக்கு 11 மூட்டைகள் வரை முந்திரி விளைச்சல் கிடைத்தது. அது போன்று இனி விளைச்சல் கிடைக்க வேண்டும் என்றால், இன்னும் 4 ஆண்டுகள் ஆகும். அது வரையில் எங்களுக்கு வருமான இழப்பு நீடித்து கொண்டு தான் இருக்கும். தற்போது, சீசன் தொடங்கி உள்ளதால் முந்திரி மரங்களில் காய்கள் காய்க்க தொடங்கி உள்ளது. ஏப்ரல் கடைசி வாரத்தில் இருந்து முந்திரிகளை பறிக்கும் பணியை தொடங்குவோம். என்றார்.

**தர்பூசணி விற்பனை அமோகம்**



விழுப்புரம் நேருஜி சாலையில் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ள தர்பூசணிகளை படத்தில் காணலாம்.

**விழுப்புரம்,**

வெயிலின் கொடுமை யால் தர்பூசணி பழங் கள் அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சுட்டெரிக்கும் வெயில்

தற்போது கோடை காலம் தொடங்கியுள்ளதால் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. ஏப்ரல், மே மாதத்தில் ஏற்படும் உச்ச கட்ட வெயிலுக்கு அச்சாரமாக இப்போதே விழுப்புரத்தில் பொதுமக்களை, வெயில் வாட்டி வதைத்து வருகிறது.

அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் தொடங்கு வதற்கு முன்பாகவே வெயிலின் உக்கிரம் படிப்படியாக அதி கரிக்க தொடங்கியிருக்கிறது.

சாலைகளில் நடந்து செல்ல முடியாத அளவிற்கு அனல் காற்று வீசுகிறது. இதனால் பெரும்பாலானவர்கள், சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமையை தாங்க முடியாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வழக்கமாக ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் தான் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டோ மார்ச் மாதத்திலேயே வெப் பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதால் அனைத்து தரப்பு பொதுமக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தர்பூசணி விற்பனை அமோகம்

வெயிலின் தாக்கத்தினால் விழுப்புரம் பகுதிகளில் குளிர்பானம், ஜூஸ், இளநீர், ஐஸ்கிரீம், மோர் ஆகியவை விற்பனை செய்யும் கடைகளில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதுகிறது. மேலும் இயற்கை நமக்கு கொடுத்த நீர்சத்து நிறைந்த தர்பூசணி, வெள்ளரிப்பிஞ்சு, வெள்ளரிப் பழம் ஆகிய வற்றையும் பொது மக்கள் நாடிச் செல்கின்றனர். குறிப் பாக கோடை காலம் ஆரம் பித்தவுடனே மக்கள் மனதில் முதலில் நினைவுக்கு வருவது தர்பூசணி பழங்கள் தான். ஏனெனில் பழச்சாறு, இளநீர், குளிர்பானங்கள் மற்றும் பழவகைகள் இவை களை காட்டிலும் தர்பூசணி பழங் கள் குறைந்த விலையில் கிடைப்பதால் பொதுமக்கள் மத்தியில் தர்பூசணி பழத்திற் கென்று தனி ‘மவுசு’ உள்ளது. இதனால் தற்போது தர் பூசணி பழங்களின் விற்பனை சூடு பிடித்துள்ளது. விழுப்புரம் நேருஜி ரோடு, திரு.வி.க. ரோடு, சென்னை- திருச்சி தேசிய நெடுஞ்சாலை உள் ளிட்ட முக்கிய சாலை யோரங்களில் தர்பூசணி பழங்கள் குவித்து வைக்கப் பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2 கிலோ முதல் 8 கிலோ வரை எடை கொண்ட தர்பூசணி பழங்கள் விற்பனைக் காக வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அனைவரும் இங்கு படையெடுத்துச் சென்று எடைக்கணக்கில் தர்பூசணி பழங்களை ஆர்வமுடன் வாங்கி சென்ற வண்ணம் உள்ளனர். 1 கிலோ தர்பூசணி ரூ.15-க்கு விற்க படுகிறது. விலையை பொருட் படுத்தாமல் பொதுமக்கள் போட்டி போட்டுக்கொண்டு தர்பூசணி பழங்களை வாங்கி செல்கின்றனர். சிறுவர், சிறுமி களுக்காக தர்பூசணி பழங் களை சிறு, சிறு துண்டு களாகவும் வெட்டி

வைத்து விற்பனை செய்கின்றனர். அவற்றை மகிழ்ச்சியுடன் வாங்கி சாப்பிட்டு வெப்பத்தின் தாக்கத்தை ஓரளவு தணித்து வருகின்றனர்.

**கொத்தமல்லி விவசாயத்திற்கு மாறும் திராட்சை விவசாயிகள்**



கம்பம் பகுதியில் உள்ள திராட்சை தோட்டங்களில் கொத்தமல்லி பயிரிடப்பட்டுள்ள காட்சி.

கம்பம் பகுதியில் உள்ள திராட்சை விவசாயிகள் கொத்தமல்லி விவசாயத் திற்கு மாறி வருகின்றனர்.

மாற்று விவசாயம்

தேனி மாவட்டம் கம்பம் பகுதி திராட்சை விவசாயத் திற்கு பெயர் பெற்ற பகுதி. ஒருகாலத்தில் திராட்சை சாகுபடியால் வளம் கொழித்த இந்த பகுதியில் தற்போது திராட்சை விவசாயம் மெல்ல மெல்ல அழிந்து வருகிறது. சரியான விலை கிடைக் காததால் திராட்சை சாகுபடி பயிரிடும் பரப்பு குறைந்து வருகிறது.

மேலும், விளைச்சல் குறைந்தது, அதிக உற்பத்தி செலவு, விலை குறைவு, வியா பாரிகள்- விவசாயி களிடையே புரிந்துணர்வு இல்லாதது போன்ற காரணங்களால் வேதனை அடைந்த விவசாயி கள் தங்கள் நிலங்களில் பயிரிப்பட்டிருந்த திராட்சை கொடிகளை வெட்டி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு பகுதிகளில் விவசாயி கள் மாற்று விவசாயத்திற்கு செல்ல தொடங்கி உள்ளனர்.

கொத்தமல்லி சாகுபடி

திராட்சை தோட்டங்களில் கொடிகள் வெட்டி அகற்றப் பட்ட பின்னர் புடலங்காய், குட்டை பப்பாளி, காய்கறிகள் போன்றவற்றை விவசாயிகள் பயிரிட்டு

வருகின்றனர். இதில் கொத்தமல்லி பயிரிடுவது அதிகரித்து வருகிறது. கொத்த மல்லி விளைச்சல் அடை வதற்கு 40 நாட்கள் ஆகிறது. இதற்காக சொட்டு நீர்ப் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.

தற்போதைய சந்தை நிலவரப்படி கொத்தமல்லி கிலோ ரூ.20 வரை விற்பனை ஆகிறது. இது பற்றி விவசாயி ஒருவர் கூறும் போது, 'கொத்தமல்லி பயிரிடுவது எளிதாக உள்ளது. அதிக வீரியமிக்க விதைகளை வாங்கி சாகுபடி செய்து வருகிறோம். அதே நேரத்தில் மீண்டும் திராட்சை விவசாயம் மீண்டும் நல்ல நிலைக்கு வரும் என்ற நம்பிக்கையில் கல் கால், கொடிகளை அப்படியே விட்டு வைத்துள்ளோம்' என்றார்.

**தேனி மாவட்டத்தில் திடீர் மழை**



தேனி மாவட்டத்தில் திடீ ரென பெய்த மழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

**<u>திடீர் மழை</u>**

தேனி மாவட்டத்தில் கடந்த வருடம் பருவமழை பெய்யா மல் ஏமாற்றியது. இதனால் மாவட்டமே வறட்சியின் பிடியில் சிக்கியது. கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளது. மழை இல்லாமல் பயிர்கள் கருகின. இதையடுத்து மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர்.

இந்த நிலையில் தேனி நகர் மற்றும் பரவலாக மாவட்டத் தில் எல்லா இடங்களிலும் நேற்று முன்தினம் இரவு திடீ ரென மழை பெய்தது. திடீரென பெய்த மழையால் மழை நீர் சாலைகளில் வெள்ளம் போல் ஓடியது. தேனி, ஆண்டிப்பட்டி, வீர பாண்டி, வைகை அணை பகுதி, தேவதானப்பட்டி, உத்தம பாளையம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

<u>மழை அளவு</u>

நேற்று முன்தினம் இரவு உத்தமபாளையத்தில் 2 மி.மீ., வீரபாண்டியில் 4 மி.மீ., வைகை அணையில் 5 மி.மீ., மஞ்சளாறு பகுதியில் 10 மி.மீ., சோத்துப்பாறையில் 34 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளன. கடும் வெயில் வாட்டி வந்த நிலையில் திடீ ரென மழை பெய்தது பொது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**தரமற்ற விதை விற்பனை செய்தவர்களுக்கு அபராதம்**

**நெல்லை,**

கல்லிடைக்குறிச்சி பகுதியில் தரமற்ற விதை பிற்பனை செய்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

<u>அதிகாரிகள் ஆய்வு</u>

நெல்லை விதை ஆய்வு துணை இயக்குனர் இளங்கோ உத்தரவின் பேரில், வள்ளியூர் விதை ஆய்வாளர் நடராஜன் மற்றும் அதிகாரிகள் கல்லிடைக்குறிச்சி பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, விதை மாதிரிகள் ஆய்விற்காக விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பப்பட்டது. விதை பரிசோதனையின் முடிவில், அந்த விதைகள் முளைப்புதிறன் குறைவாக இருந்தது என்று கண்டறியப்பட்டது. இதையடுத்து தரமற்ற விதைகளை விற்பனை செய்த விற்பனையாளர், வினியோகஸ்தர் மற்றும் உற்பத்தியாளர் மீது அம்பை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

<u>அபராதம்</u>

வழக்கை நீதிபதி விசாரித்து, தரமற்ற விதை உற்பத்தி செய்த நிறுவனம், உற்பத்தியாளர் ஆகியோருக்கு தலா ரூ.500 வீதம் மொத்தம் ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு கூறினார். இந்த தகவலை நெல்லை விதை ஆய்வு துணை இயக்குனர் இளங்கோ தெரிவித்தார்.